பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 18 சனிக்கிழமை 06.11.2022 கதிர் 252

யாழில் வன்முறைக் கும்பல் வெறியாட்டம்

## பாதுகாப்பு ஊழியர் வாள்வெட்டில் காயம்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மீது வன்முறைக் கும்பல் ☞

# கூட்டுத் தந்திரோபாயங்களால் தேர்தலை ஒத்திவைக்காதீர்கள்

## அரசிடம் சஜித் வலியுறுத்து









கூட்டுத் தந்திரோபாயங்களால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என்று அரசிடம் வலியுறுத்தியுள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. 8☞

# யாழில் டெங்கு தீவிரம்

அவதானமாக இருக்கும்படி சுகாதாரத்துறை அறிவுறுத்து





யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும், டெங்குத் தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனவே தொற்று மேலும் தீவிரமாகாமல் இருக்கவும் தொற்றுக்கு தாம் உட்படாமல் 2☞

# வவுனியா கோர விபத்தில் பஸ் சாரதி உட்பட மூவர் பலி

## 16 பேர் காயம்; நால்வர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில்



(வவுனியா நிருபர்)

வவுனியா, நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சாரதி உட்பட மூவர் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதி சொகுசு பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வவுனியா, நொச்சிமோட்டைப் பாலத்தில் மோதி தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இன்று அதிகாலை 12.15 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றது. 2☞

யாழில் போலி உறுதி மோசடி வழக்கு;


## பொலிஸ் புலன் விசாரணைக்கு சட்டத்தரணி சிறீகாந்தா எதிர்ப்பு



யாழ்ப்பாணம் மாநகரில் போலி உறுதி மூலம் காணி மாசடி இடம்பெற்றமை தொடர்பான வழக்கில், பொலிஸாரின் புலன் விசாரணைகளுக்கு மூத்த சட்டத்தரணி என். சிறீகாந்தா கடும் அதிருப்தி தெரிவித்தார்.

இதையடுத்து, சந்தேகநபர் தரப்பில் பொலிஸாருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பரிசீலித்து 8☞

## உடுப்பிட்டி பஸ் சாரதியே வவுனியா விபத்தில் சாவு



யாழ். வடமராட்சி, உடுப்பிட்டியைச் சேர்ந்த பஸ் சாரதியே வவுனியா விபத்தில் உயிரிழந்தவராவார். 2☞

நாவலப்பிட்டியைச் சேர்ந்த

## யாழ். பல்கலை சித்த மருத்துவ பீட மாணவி வவுனியா விபத்தில் பலி



வவுனியாவில் இன்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த யுவதி நாவலப்பிட்டியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தில் கல்வி பயிலும் 23 வயதான இராமகிருஷ்ணன் சயாகரி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் வவுனியா பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. 2☞

# அரசியல் தீர்வு உறுதி!

## நீதி அமைச்சர் திட்டவட்டம்



புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மைச் சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகளும் புதிய அரசமைப்பு தொடர்பிலும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்து-வம் வழங்கிக் கலந்துரையாடிவருகின்றனர். எனவே, இந்தக் கருமத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான அனைத்துப் பணிகளும் 2☞

வெளிநாடு செல்லவிருந்த

## பருத்தித்துறை இளைஞரும் வவுனியா விபத்தில் மரணம்



வவுனியா – நொச்சிமோட்டையில் இன்று அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் வெளிநாடு செல்லவிருந்த இளைஞர் ஒருவரும் சாவடைந்துள்ளார்.

பருத்தித்துறை, இன்பர்சிட்டியைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது 25) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார். 2☞

## உடுப்பிட்டி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி, வல்வெட்டித்துறையில் இருந்து யாழ். மாநகர் ஊடாக கொழும்பு நோக்கி இவர் செலுத்திச் சென்ற அதி சொகுசு பஸ்ஸே வவுனியா, நொச்சி மோட்டைப்பாலத்துக்கு அருகில் இன்று அதிகாலை விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சாரதி உட்பட மூவர் உயிரிழந்தனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவபாலன் சிவரூபன் (வயது 32) என்ற சாரதியே உயிரிழந்தார். இவர் உடுப்பிட்டி பிரதேசத்தின் பல்வேறு சமூகச் செயற்பாடுகளிலும் துடிப்புடன் முன்னின்று செயற்படுபவர் எனத் தெரியவந்துள்ளது.

சமூகச் செயற்பாடுகளூடாக கிராம மக்களின் பேரன்புக்கு உரியவராவார். அத்துடன் கடின உழைப்பாளியுமாவார். இவரின் திடீர் மறைவு உடுப்பிட்டி வாழ் மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அவரின் நண்பர்கள் தெரிவித்தனர்.

## வவுனியா கோர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது பஸ்ஸின் சாரதியும், இளைஞர் ஒருவரும், யுவதி ஒருவரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இதேவேளை, பஸ்ஸில் பயணித்த 16 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் நால்வர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து ஏற்பட்ட வேளை அதே திசையில் பயணித்த மற்றுமொரு அதி சொகுசு பஸ்ஸின் சாரதி தனது பஸ்ஸை விபத்தில் இருந்து தடுப்பதற்காக வீதியின் ஓரமாகச் செலுத்தி இன்னொரு பாரிய விபத்தைத் தவிர்த்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா மற்றும் ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பருத்தித்துறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுப் பயண ஏற்பாட்டுக்காக குறித்த பஸ்ஸில் பருத்தித்துறையிலிருந்துகொழும்புசென்றவேளையிலேயே விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த பஸ் விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும்.

-இவ்வாறு யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரித்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 774 வரையானோர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். 8 பேர் இந்த வருடத்தில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் தொற்றின் தாக்கம் தீவிரமாகவுள்ளது. தற்போது மழைக்காலம் என்பதால் பொதுமக்கள் கூடுதல் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

டெங்கு நுளம்பு சுத்தமான தண்ணீர்ப் பரப்பிலேயே பல்கிப்பெருகும். ஆதலால், ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தாம் சார்ந்த பகுதிகளில் துப்புரவைச் சரிவரப் பேணி ஒத்துழைப்புத் தர வேண்டும்.

இந்தக் காலப்பகுதியிலே காய்ச்சல் ஏற்பட்டால் அது பெரும்பாலும் டெங்கு நோயாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

எனவே பொதுமக்கள் தாமதிக்காது உடனடியாகவே மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்.கொள்ள வேண்டும். தாமதமாக மருத்துவமனைகளை நாடுகின்றமையே இறப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் - என்றார்.

## பாதுகாப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அச்சுவேலி, பத்தமேனி பகுதியைச் சேர்ந்த சதீஸ்குமார் சிந்துஜன் என்பவர் மீதே வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர், விடுதியின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை இன்று அதிகாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய வன்முறைக் கும்பலே தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அரசியல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவுக்கு வரவேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன் கைதிகள் விவகாரம் (தமிழ் அரசியல் கைதிகள்), காணி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை அரசு வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே கைதிகள் (தமிழ் அரசியல் கைதிகள்) சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

நல்லாட்சி அரசில் தீர்வு விடயத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது. ஆனால், தற்போது கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. ஒத்துழைப்பு கிடைக்கின்றது. ஆனால், அந்த ஒத்துழைப்பு முழுமையான ஒத்துழைப்பாக இருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் காணி விவகாரம் தொடர்பில் பல முறைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்மிடம் முன்வைத்துள்ளனர். இவை தொடர்பில் நாம் நேரில் ஆராய்ந்து விரைந்து தீர்வு காண்போம். எந்தத் தரப்பும் பாதிக்காத வகையில் நாம் தீர்மானங்களை எடுப்போம் -என்றார்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## திருந்தச் செய்யோம்....!

இலங்கையின் அரசியல் நிர்வாக முறைமைகளில் அல்லது செயற்பாட்டு நடவடிக்கைகளில் எதையுமே துல்லியமாக, கனகச்சிதமாக, நுணுக்கமாக, நுட்பமாகத் திட்டமிட்டு செவ்வனே செய்து முடிப்பதில்லை.

எப்போதும் 'முயன்று பார்த்தல், பின்னர் பிழைத்தால் சரி செய்தல்' என்ற trial and error முறைமைதான்.

அதுவே அரசியல் நிர்வாகத்தில் இருந்து அரசமைப்பு திருத்தம் வரை எல்லாவற்றிலும் இலங்கையின் போக்கு என்றாகிவிட்டது.

நாட்டின் பொருளாதாரம் கூட இப்படி அடிபட்டு, நசிந்து, மீள முடியாத அளவில் வீழ்ந்து போய்க் கிடக்கின்றது என்றால், அதற்குக் காரணம் எல்லாவற்றையும் தான்தோன்றித்தனமாகச் செய்து பார்த்து, பிழைத்தால் பின்னர் திருத்த முயற்சித்தல் என்ற முறைமையைக் கையாளுவதால்தான்.

எதையும் ஒரே தடவையில் செவ்வனே திட்டமிட்டு, துல்லியமாகக் கணித்து, நுணுக்கமாக கையாண்டு, கனகச்சிதமாக முடிக்கும் தயாரிப்பும் செயல்திறனும் நம்மிடையே இல்லை.

செய்வோம், பிழைத்தால் திரும்பவும் செய்து பிழை திருத்தம் மேற்கொள்வோம் என்ற கணிப்பீடு தான்.

அரசமைப்புத் திருத்தம் ஒன்று நாடாளுமன்றுக்கு வரும்போது அதன் மூல வடிவம் ஒன்றாக இருக்கும். சம்பந்தப்பட்ட கட்சிகள், ஆதரவு அணிகள் போன்றவற்றின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு, அதில் பிய்ச்சல் பிடுங்கல் மேற்கொள்ளப்படும். இறுதியில் நிறைவேற்றப்படும் புதிய திருத்த வடிவத்தை பார்த்தால் 'பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாக' அது இருக்கும்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை குறைத்தல், கூட்டுதல் என்ற பெயர்களில் 17, 18, 19, 20, இப்போது 21 என்று ஐந்து முறைகள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட அரசமைப்புத் திருத்த நகல் வடிவங்களையும், அவற்றுக்குக் குழு நிலையில் நாடாளுமன்றத்தில் செய்யப்பட்ட திருத்தங்களையும் ஒரு மதிப்பீட்டு நோக்கில் மேலோட்டமாக ஆராய்ந்தாலேயே அவற்றின் சீத்துவம் தெரிந்து விடும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையில் இருக்கின்ற குளறுபடிகள் காரணமாக இதற்கென்று மீண்டும் ஒருமுறை எல்லை நிர்ணயம் செய்வதற்காகக் குழு ஒன்றை நியமித்திருக்கிறார்கள் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கொழும்பில் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

ஏற்கனவே இந்த விடயத்திற்காக நீண்ட காலம் இழுபட்டு, உள்ளூராட்சி சபை வட்டாரங்கள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, இதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றின் கீழ் தேர்தல்களும் நடத்தப்பட்டு விட்டன. அதற்காகப் பெருந்தொகை நிதியும், நேரமும் விரயமாக்கப்பட்டன. அந்த முறைமையின் கீழ் உருவான சபைகளே இப்போதும் இயங்குகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தாமல் ஒத்தி வைப்பதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ பழையபடி ஆரம்பத்தில் இருந்து தேர்தல் முறைமையை ஒழுங்குபடுத்தல் என்று தொடங்கி இருக்கிறார்கள்.

மீண்டும் மலையைக்கேல்லி எலியை பிடிக்கும் வேலைதான் இது.

இலங்கை திருந்த போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

## கல்முனை சந்தான்கேணியில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை மீட்க மாநகரசபை நடவடிக்கைகள்!

கல்முனை சந்தான்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானக் காணியில் தனி நபர்களினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற நிலப் பகுதிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான விசேட ஆலோசனைக் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

வியாழக்கிழமை மாலை கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இந்த விசேட ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், கல்முனை சந்தான்கேணி விளையாட்டு மைதான எல்லைகளில் இடம்பெறும் அத்துமீறல்கள், அனுமதியற்ற கட்டுமானங்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்றங்கள் போன்ற விடயங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய துரித நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இந்த மைதானக் காணியின் எல்லைப்பகுதிகளில் கடந்த 25 வருடங்களுக்கு மேலான காலப் பகுதிகளில் தனி நபர்களின் அத்துமீறல்கள் காரணமாக அதன் பரப்பளவானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருப்பதாகவும் இயற்கையாக நீர் வடிந்தோடும் கால்வாய் கூட அடைக்கப்பட்டிருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்திருக்கின்ற நபர்களை விரைவாக கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்து, தேவையான அறிவுறுத்தல்களையும் உத்தரவுகளையும் வழங்குவதற்கும் இணக்கப்பாட்டுக்கு முன்வரத் தவறுகின்ற ஆக்கிரமிப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.



## போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்தக் குழு!

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட சமூக சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரச அதிபர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

விஷேட குழு ஒன்றை, உருவாக்கி அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதற்கமைய நேற்று (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தக் குழு நியமிக்கப் பட்டது.

இதற்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## கலாசார உணவுத் திருவிழா கண்டாவளையில் நடந்தது!



கண்டாவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், கலாசார உணவுத் திருவிழா இடம்பெற்றது.

பரந்தன் விளையாட்டு மைதானத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் இந்த உணவுத் திருவிழா ஆரம்பமானது.

இந்தநிகழ்வுகண்டாவளைபிரதேச செயலாளர்ரி.பிருந்தாகரன்தலைமையில் 'கிராமத்திலிருந்து உணவு பாதுகாப்பு' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இதன்போது கிராமத்தில் எளிதாக கிடைக்கக் கூடிய உணவு பண்டங்களைக் கொண்டு பல்வேறு வகை உணவுகள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டதுடன், இலவசமாக மக்களும், மாணவர்களும் சுவைக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. அத்துடன், மேற்படி உணவுகளைத் தயாரிக்கும் முறைகளும் செய்து காண்பிக்கப்பட்டன.

பனம்பழம், மரவள்ளி, நிலக்கடலை, சத்துணவுகள், கடலுணவு என 10 இற்கு மேற்பட்ட உணவு பந்தல்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மூலப்பொருளிலும் இருந்து 10 இற்கு மேற்பட்ட உணவுகள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முகமாலை பொது நூலக உப அலுவலகம் திறப்பு!

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட இத்தாவில் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகமாலை பொது நூலக உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் இந்த பொது நூலக உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் பச்சிலைப்பள்ளியின் பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இசை நிகழ்வு மற்றும் வயலின் இசை மற்றும் 'பச்சிலை' சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. பச்சிலைப் பள்ளியின் பிரதேச சபையின் ஒரு கோடியே 50 லட்சத்து 59 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முகமாலை பொது நூலக உப அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஹிஜாப் எதிர்ப்பு பேராட்டத்தில் ஆறு வாரங்களில் 227பேர் பலி

## பல்லாயிரக்கணக்கானோர் கைது..!!





நியூயோர்க், நவ.05

ஈரான் நாட்டில் ஹிஜாப் எதிர்ப்பு பேராட்டங்களில் ஆறு வாரங்களில் 227பேர் பலியாகியுள்ளனர்.பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரான் நாட்டில் இஸ்லாமிய மத சட்டங்களின்படி ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், தெஹ்ரான் நகரில் ஹிஜாப் சரியாக அணியவில்லை எனக் கூறிப் பொலிஸார் நடத்திய தாக்குதலில் கோமா நிலைக்கு சென்ற 22 வயதான மாஷா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம் உயிரிழந்தார்.

இதனை கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீவைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஈரானில் மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா. குழுவைச் சேர்ந்த ஜாவத் ரஹ்மான் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கடந்த 6 வாரங்களாக ஈரானில் நடக்கும் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள், சட்ட மாணவர்கள் என இதுவரை 14,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஈரானின் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 277 பேர் பலியாகினர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். இந்தப் போராட்டம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் -என்று தெரிவித்துள்ளார்.

## ஆபிரிக்காவின் மிகப்பெரிய பெண் யானை உயிரிழந்தது



நைரோபி, நவ.05

ஆபிரிக்காவின் மிகக் பெரிய பெண்யானை கடந்த சில நாள்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாகக் கூறப்பட்டுகின்றது.

உலகில் சுமார் 50 ஆயிரம் யானைகள் உள்ள நிலையில், அவற்றில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமாக ஆபிரிக்காவில் உள்ளன. மேலும், யானைகளை அழிவில் இருந்து காக்க பல்வேறு நாடுகள் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இதனிடையே, ஆபிரிக்காவின் மிகப்பெரிய பெண் யானை என்ற பெருமை கென்யாவில் உள்ள டிடா என்ற யானை கொண்டிருந்தது. 60 முதல் 65 வயது கொண்ட இந்த யானை கென்யாவின் டிசவோ கிழக்கு தேசிய பூங்காவில் வாழ்ந்து வந்தது.

வயது முதிர்வு காரணமாக பெண் யானை டிடா உயிரிழந்துவிட்டதாக கென்ய வனத்துறை தெரிவித்துள்ளது. ஆபிரிக்காவின் மிகப்பெரிய பெண் யானையாக கருத்தப்பட்ட டிடா உயிரிழந்த நிகழ்வு வன விலங்கு ஆர்வலர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவாராம் ட்ரம்ப்




வாஷிங்டன், நவ.05

அமெரிக்காவின் அடுத்துவரும் அதிபர் தேர்தலில் தான் போட்டியிடுவேன் என்று தனது ஆதரவாளர்களுக்கு அறிவித்துள்ளார் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்.

2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகள் அமெரிக்காவின் அதிபராக இருந்தவர் டொனால்ட் டிரம்ப். பல்வேறு அதிரடி நடவடிக்கைகளுக்கு பெயர் போன டிரம்ப் அமெரிக்காவின் அதிபராக இருந்த காலத்தில் வடகொரியாவுடன் நட்பு, இஸ்ரேல்- அரபு நாடுகள் இடையேயான நட்பை ஏற்படுத்துவது உள்பட பல்வேறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை, 2020 ஆம் ஆண்டு டொனால்ட் டிரம்ப் மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால், தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். புதிய அதிபராக ஜோ பைடன் தேர்தெடுக்கப்பட்டார். இதனிடையே, 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் டிரம்ப் போட்டியிட அதிக வாய்ப்புகள் உள்ளன எனத் தகவல்கள் வெளியாகி வந்தன. இந்நிலையில், முன்னாள் அதிபர் டிரம்ப் நேற்று, நடந்த நிகழ்ச்சியில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசினார்.

அப்போது டிரம்ப், நான் 2 முறை தேர்தலில் போட்டியிட்டேன். 2 முறையும் வெற்றிபெற்றேன். 2016 ஆம் ஆண்டு பெற்றதை விட 2020 ஆம் ஆண்டு தேர்தலில் நான் 10 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றேன்.

அமெரிக்க வரலாற்றில் பதவியில் இருந்த அதிபர் அதிக வாக்குகள் பெற்றது அதுவே முதல்முறை. போதும் நமது நாட்டை பாதுகாப்பாகவும், வெற்றிகரமாக நடத்தவும் நான் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவேன். விரைவில் போட்டியிடுவேன். தயாராக இருங்கள் என்றுள்ளார்.

# இஸ்ரேல் பிரதமர் பதவியேந்க முன்னே காசாவில் இருந்து ரொக்கெட் தாக்குதல்



டெல் அவிவ், நவ.05

இஸ்ரேல் நாட்டில் பிரதமர் தேர்தல் நடந்து முடிந்த நிலையில் பெஞ்சமின் நெதன்யாகுவின் லிக்குட் கட்சியும், அதிதீவிர யூத மதக் கூட்டணி ஆகியோரை உள்ளடக்கிய வலதுசாரி கூட்டணியினருக்கும் சேர்த்து 64 இடங்கள் கிடைத்தன. தேர்தலில் மக்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு தேர்தெடுக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து காபந்து அரசின் பிரதமராக இருந்த யாயிர் லாபிட் தனது வாழ்த்துகளை நெதன்யாகுவுக்குத் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் இது பலஸ்தீனியர்கள் மற்றும் அருகிலுள்ள அரபு நாடுகளிடையே ஒருவிதமான பதற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கின்றது. அதாவது கடந்த 1948 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் அங்கீகரிக்கப்பட்ட நாடாக இருக்கிறது. ஆனால், அதன் அருகிலுள்ள பலஸ்தீனம் அங்கீகாரத்துக்காகப் போராடி வருகிறது. இரண்டு தரப்பு நாடுகளும் ஒன்றையொன்று கடுமையாகத் எதிர்த் தாக்குதல்களை நடாத்துவதுண்டு.

இந்த மோதல் சமீபகாலமாக மேலும் வலுவடைந்து வருகின்ற நிலையில், இஸ்ரேல் தேர்தலில் நெதன்யாகு வெற்றி பெற்றமையைத் தொடர்ந்து காசாவில் இருந்து 4 ரொக்கெட்டுகள் வீசப்பட்டன என்று கூறப்படுகின்றது. இந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை என்றும், இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஜெனின் பகுதியில் அல்-குத்ஸ் படையின் தளபதி படுகொலை செய்யப்பட்டதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நீட் தேர்வுக்கான பயிற்சி மையங்களை மீண்டும் ஆரம்பிக்கின்றது தமிழக அரசு



சென்னை, நவ.05

மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வை ஆரம்பத்திலிருந்து தமிழக அரசு எதிர்த்து வருகின்ற நிலையில் நீட் தேர்வில் இருந்து விலக்கு கிடைக்கும் வரை அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் ஒன்றியத்துக்கு ஒரு பயிற்சி மையம் என்ற அடிப்படையில் 412 நீட் தேர்வுக்கான இலவச பயிற்சி மையங்களை ஏற்படுத்தி அதன் மூலம் பயிற்சி வகுப்புகள் தமிழக அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான நீட் தேர்வு பயிற்சி வகுப்புகளை தொடங்குவது குறித்த அறிவிப்பை பள்ளி கல்வித்துறை நேற்று வெளியிட்டிருக்கிறது. அதில், போட்டித் தேர்வுகளுக்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11, 12ஆம்வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு வருகிற மூன்றாவது வார சனிக்கிழமைகளில் இருந்து, ஒவ்வொரு வார சனிக்கிழமைகளிலும் நேரடி பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

போட்டி தேர்வுக்கு பயிற்சி பெற விரும்பும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் 11ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில், ஒன்றியத்துக்கு அதிகபட்சம் 50 பேரும், 11ஆம் வகுப்பு மாணவர்கள் 10ஆம்வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் ஒன்றியத்துக்கு அதிகபட்சம் 20 பேரும் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுகளில் 12ஆம்வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே நீட் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வந்த நிலையில்,

இந்த ஆண்டு முதல் 11ஆம்வகுப்பு மாணவர்களுக்கும் அந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மங்களூர் இனி 'மங்களூரு' ஆகிறது! விமான நிலையப் பெயரும் மாற்றம்




மங்களூரு,நவ.05

தட்சிண கன்னடா மாவட்டம் மங்களூர் சர்வதேச விமான நிலையத்தின் பெயரை மாற்றுவது குறித்து இந்திய விமான நிலைய ஆணையம் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அது தொடர்பான அறிக்கையில.-

தட்சிண கன்னடா மாவட்டம் மங்களூரு அருகே உள்ள பஜ்பே பகுதியில் மங்களூர் சர்வதேச விமான நிலையம் இயங்கி வருகிறது.

இது கர்நாடகத்தில் பெங்களூரு விமான நிலையத்திற்கு அடுத்தபடி யாக உள்ளது. இந்த நிலையில் மங்களூர் விமான நிலையம் என்ற பெயரை அடுத்த மாதம் (டிசம்பர்) முதலாம் திகதி முதல் மங்களூரு சர்வதேச விமான நிலையம் ஆக மாற்றப்படுகிறது. மங்களூர் நகரின் பெயர் 'மங்களூரு' என்று மாற்றப்பட்டதைத் தொடர்ந்து 'மங்களூரு சர்வதேச விமான நிலையம்' என்று பெயர் மாற்றப்படுகிறது.என்றுள்ளது.

இந்த விமான நிலையத்தை நிர்வகிக்கவும், மேம்படுத்தவும் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் 50 ஆண்டுகளுக்கு அதானி குழுமத்தின் வசம் அது ஒப்படைக்கபட்டது குறிப்பிடத்தக்கது.



## கழிவுப் பொருள் விற்பனையில் வருமானம் ரூ.364கோடி மத்திய அரசுக்குக் கிட்டியது

புதுடெல்லி, நவ.05

மத்திய அரசு துறைகளில் கடந்த மாதம் 2 ஆம் திகதியில் இருந்து 31ஆம் திகதி வரை சிறப்புத் தூய்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதில் நீண்ட காலமாக தேங்கிக்கிடந்த கழிவுப் பொருள்கள் அகற்றுதல், பழமையான கோப்புகள் ஆய்வு செய்து அப்புறப்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் நடந்தன. ஒரு மாதமாக நடந்த இந்தப் பணிகளில் கழிவுப் பொருள்கள் விற்பனை மூலம் அரசுக்கு ரூ.364.53 கோடி வருவாய் கிடைத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக ராணுவ நலத்துறையில் இருந்து ரூ.212.76 கோடி வருவாய் கிடைத்து உள்ளது. அடுத்ததாக நிலக்கரி அமைச்சகம் ரூ.48.51கோடியும், ரயில்வே அமைச்சகம் ரூ.33.05 கோடியும் வருவாய் ஈட்டியுள்ளன. இதைப்போல கப்பல் போக்குவரத்து அமைச்சகம் ரூ.14.82 கோடி, பாதுகாப்பு உற்பத்தி துறை ரூ.13.06 கோடியும் ஈட்டியுள்ளன என மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

## காற்று மாசு விடயம் தொடர்பில் 4 மாநிலங்கள் விசாரணையில்!



புதுடெல்லி, நவ.05

மனித உயிருக்கு டெல்லியில் நிலவும் காற்று மாசு அச்சுறுத்தலாக இருப்பதாகவும், மனிதனின் ஆயுள் காலம் குறைவதாகவும் வெளியான பத்திரிகை செய்தி அடிப்படையில், இதை தேசிய மனித உரிமை ஆணையம் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. ஆணையத்தின் உத்தரவின்பேரில், மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஓர் அறிக்கை தாக்கல் செய்தது.

அதன் அடிப்படையில், காற்று மாசு விவகாரம் குறித்து ஆலோசனை நடத்த வருமாறு டெல்லி, பஞ்சாப், அரியானா, உத்தரபிரதேசம் ஆகிய 4 மாநிலங்களின் தலைமை செயலாளர்களுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் அழைப்பாணை அனுப்பி உள்ளது. வருகிற 10 ஆம் திகதி நேரிலோ அல்லது காணொலி மூலமோ ஆஜராகுமாறு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளைநிலங்களுக்குள் புகுந்தது கடல் நீர் விவசாயிகள் வீதி மறியல் போராட்டத்தில்

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவ மழை காரணமாக கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருகின்ற நிலையில் கடந்த 2 நாள்களுக்கு முன்பு மயிலாடுதுறைமாவட்டம் சீர்காழி பகுதியில் 22 செ.மீ. மழை கொட்டி தீர்த்தது. இந்த தொடர் மழையாலும், கடலின் சீற்றம் காரணமாகவும் திருமுல்லைவாசல் பகுதியில் உள்ள உப்பனாற்று கரைகள் உடைக்கப்பட்டு கடல் நீர் விளைநிலங்களுக்குள் புகுந்துள்ளது.

இதனால் திருமுல்லைவாசல், ராதாநல்லூர், விடுதலைக்குடி, வருப் பத்து உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்திருந்த சம்பா நெற்பயிர்கள் கடல் நீரில் மூழ்கி வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட இடங்களை அதிகாரிகள் பார்வையிட வராதமையைக் கண்டித்தும், உப்பனாற்று கரைகளை பலப்படுத்தாத பொதுப்பணித்துறை அதிகாரிகளைக் கண்டித்தும் திருமுல்லைவாசல் சாலை வழுதலைகுடி என்ற இடத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரி அவர்கள் கோஷங்கள் எழுப்பியிருந்தனர். இதனையடுத்து தகவல் அறிந்த வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் பொலிசார் நேரில் வந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயி களிடம் பேச்சுவார்த்தைநடத்திஉரியநடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித் தனர். அதன்பேரில் விவசாயிகள் போராட்டத்தைக் கைவிட்டனர். இந்தப் போராட்டத்தின் காரணமாக அந்த வீதியில் அரை மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலையில் மூலிகைச் செடிகள் நடுகையும் அறுவடையும்




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதர சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போஷாக்கு திட்டத்தின் கீழ் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் அறுவடையைத் தொடர்ந்து, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸின் நிந்தவூர் ஆயுள்வேத வைத்தியசாலையில் மூலிகை செடிகள் நடப்பட்டமையுடப் கடந்த மூன்று மாத காலத்திற்கு முன் நடப்பட்ட மரங்கள் மற் றும் மூலிகைச் செடிகளில் அறுவடை செய்யப்பட்டு அக்கரைப்பற்று மருந்து உற்பத்தி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ. நபீல் உட்பட வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் பங்குபற்றினார்கள்.

## பாதிப்புற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஏறாவூர்பற்றில் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு




(கே. எ. ஹமீட்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட செங்கலடி ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் யுத்தத்தினால் பாதிப்புற்ற பெண் தலைமை தாங்கும் குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் செங்கலடியில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இங்கையின் சமூக, பொருளாதார நெருக்கடியின்போது பாலின அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் மனித விற்பனையால் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் இருந்து தப்பியவர்கள் உட்பட பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் தொடர்பாக செயற்பட்டுவரும் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் ஏற்பாட்டில் அதன் கிழக்கு மாகாண திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. மயூரன் மேரி லெம்பட் தலைமையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிறுவனத்தின் மனிதாபிமானத்திற்குரிய தேவைக்கான திட்டத்தின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட 262 பயனாளிகளுக்கு நாற்பதா யிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொருள் கொள்வனவிற்கான வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் ஊடக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இச்செயற்திட்டத்தின் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் கே.தனபால சுந்தரம் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான வவுச்சர்களை வழங்கி வைத்து நிகழ்வை சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் உள் ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும், புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் மாவட்ட அலுவலகத்தின் அலுவலகப் பொறுப்பாளர் மு.ஜெயராஜன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான வவுச்சர்களை வழங்கி வைத்துள்ளனர்.

இந்த வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினமும், இன்றைய தினமும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## அம்பாறை மாவட்டத்தில் யானைகளின் தொல்லை

### நாளுக்கு நாள் அதிகரிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன எனக் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் கடந்த சில நாள்களாக நள்ளிரவு வேளைகளில் குடியிருப்பு பிரதேசங்களில் காட்டு யானைகள் புகுந்து வீட்டிலுள்ள பல மரங்களை நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளன.

சுனாமி குடியிருப்பு பிரதேசமான சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தில் குடியிருப்பு வீட்டில் புகுந்து தென்னை மரங்கள், வாழை, பப்பாசி, தோடம் மரங்கள் போன்றவற்றை அழித்து விட்டுச் சென்றுள்ளன.

இவ்வாறு தினம் தினம் காட்டு யானைகள் ஊருக்குள் வந்து வீட்டு உடமைகளை நாசம் செய்வதால் அது ஊருக்குள் வராமலிருக்க சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக தகுந்த நடவடிக்கையை அவசரமாக எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சம்மாந்துறையில் இருந்து 3 சித்திரங்கள் தேசிய மட்ட சித்திரப் போட்டிக்குத் தெரிவு

### வலயக்கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று வாழ்த்து

( வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை தேசிய மட்ட சித்திரப் போட்டிக்கு சம்மாந்துறை வலயத்தில் இருந்து மூன்று சித்திரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவற்றை வரைந்த மூன்று மாணவர்களை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் கடந்த வியாழக்கிழமை நேரில் சென்று வாழ்த்தினார்.

சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் எம்.எம்.மொகமட் அஸ்மல், எம்.ஆர்.எவ். சதீஹா சஹானி ஆகிய இரண்டு மாணவர்களும் தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் ஏ.ஆர். நகீஷ் என்ற மாணவரும் தேசிய மட்டத்தில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு நாளை 06 ஆம் திகதி நடைபெறும் தேசியமட்டப் போட்டிக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்திற்குத் தெரிவாகிய மாணவர்களையும் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களையும் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர், பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.ஏ. மஜீட், உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல். றியால், சம்மாந்துறை கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ.சபூர்தம்பி, சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல். அப்துல் முனாப் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்துக்கள் கூறி கௌரவித்தனர்.



# வெபர் அடிகளாரின் உருவச்சிலை நேற்று வெபர் விளையாட்டு அரங்கத்தில் திறப்பு









(பழுவூரான்)

அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாரின் உருவச்சிலை மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் வெபர் விளையாட்டு அரங்கில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அதிதிகளை வரவேற்று மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், மாநகர கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாரின் உருவச்சிலை மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவனால் திரைநீக்கம் செய்யப்பட்டது. மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் மற்றும் மாநகர சபை முதல்வரினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய பொன்னையா ஜோசேப் ஆண்டகையால் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அருட்தந்தையினால் சிலை ஆசீர்வதிக்கப்பட்டு, மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு, அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர் தி.சத்தியசீலன், மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், பாடசாலை அதிபர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## காரைதீவில் நவீனமயப்படுத்தப்பட்ட இலங்கை வங்கியின் கிளை திறப்பு






(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவில் நவீன மயப்படுத்தப்பட்ட இலங்கை வங்கி கிளை புதிய கட்டடம் நேற்று வெள்ளிக்கிழமை வங்கி முகாமையாளர் திருமதி யாழினி மோகனகாந்த் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

விழாவில் பிரதம அதிதியாக இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் சில்வா கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதியாக வங்கியின் கிழக்கு மாகாணத்திற்கான உதவி பொது முகாமையாளர் சிந்தியா மார்ட்டின், கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெககராஜன், முன்னாள் உதவி பொது முகாமையாளர் வணிகசேகர ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

காரைதீவின் முக்கிய பிரமுகர்கள், வங்கி முகாமையாளர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் ஆரம்பத்தில் பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்கப்பட்டு, தேசிய, மாகாண வங்கிக் கொடிகள் ஏற்றப்பட்டன. பின்னர் கிளை நாடா வெட்டி அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டது.

அங்கு உதவி பொதுமுகாமையாளர் சிந்தியா மார்ட்டின் வரவேற்புரை நிகழ்த்த பிரதான உரையை பிரதி பொது முகாமையாளர் பியல் செல்வா நிகழ்த்தினார்.

புதிய கொடுக்கல் – வாங்கல்கள் சம்பிரதாயபூர்வமாக நிகழ்த்தி வைக்கப்பட்டன. மேலும் 18 பிளஸ் அதிஷ்ட சாலிக்கு தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது. கட்டட உரிமையாளருக்கு கௌரவ பரிசு வழங்கி வைக்கப்பட்டது. இறுதியாக அம்பாறை மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் குமுதினி நன்றியுரையாற்றினார்.

## யாழில் மீற்றர் வட்டிக்குப் பணம் வாங்கிய வர்த்தகர் தற்கொலை!

யாழ்ப்பாணம் நகர் பகுதியில், மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கிய வர்த்தகர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நகர் பகுதியில் கடை ஒன்றை நடத்தி வந்த 37 வயதான சி.சிவரூபன் என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சமீப காலமாகவே மீற்றர் வட்டிக்கு வாங்கிய பணத்தை செலுத்த முடியாத நிலையில் கடும் மனவுளைச்சலுக்கு ஆளாகியிருந்த அவர் வியாழக்கிழமை தற்கொலை செய்து கொண்டார்.

வர்த்தக நோக்கத்துக்காக மீற்றர் வட்டிக்கு வாங்கிய பணத்தொகையின் வட்டி, அதிகரித்து திருப்பி செலுத்த வேண்டிய பணத்தொகை அதிகரித்துக்கொண்டே சென்றதால், அவர் இந்த முடிவை எடுத்திருக்கக் கூடுமென அவரது உறவினர்கள் மரண விசாரணைகளின் போது தெரிவித்திருந்தனர்.

## உணவுப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில்!



கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம் உள்ளிட்ட உற்பத்திகள் ஊடாக உணவு பாதுகாப்பை ஏற்படுத்தும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடல் நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், உணவு பாதுகாப்பு வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், முன்னேற்றங்கள் மற்றும் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது, மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்புக்கள் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## பொலிஸ் புலன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை சமர்ப்பிக்க யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் இந்தக் கட்டளையை நேற்று வழங்கினார்.

யாழ்ப்பாணம் மாநகரில் காணி ஒன்று அதன் இறந்துவிட்ட உரிமையாளர்களான தம்பதியின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அது தொடர்பாக யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கைத் தொடுத்து சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபர் கடந்த மூன்று வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் மீண்டும் வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது தமது புலன் விசாரணை தொடர்பான தொடர் அறிக்கையைப் பொலிஸ் தரப்பு தாக்கல் செய்தது. புலன் விசாரணை தொடர்வதால் சந்தேகநபரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றிடம் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

மோசடியில் சம்பந்தப்பட்ட ஏனைய சந்தேகநபர்கள் ஏன் இன்னமும் கைது செய்யப்படவில்லை? என்று மன்று கேள்வி எழுப்பியது.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா புலன் விசாரணை தொடர்பில் பொலிஸ் தரப்புக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுக்களைநீதிமன்றில்முன்வைத்தார்.

பொலிஸார்நேர்மையான முறையில் செயற்படாமல் இக்காணி மோசடியுடன் சம்பந்தப்பட்ட சில நபர்களை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர். மோசடி உறுதி நிறைவேற்றப்பட்டதில் வெளிப்படையாகவே பங்குபற்றிய பிரசித்த நொத்தாரிசு மற்றும் இரண்டு சாட்சிகள் ஆகியோரின் வாக்குமூலங்களை பதிவு செய்த போதிலும் அவர்களை இதுவரை மன்றில் முற்படுத்தவில்லை.

காணி உரிமையாளர்களான இறந்த தம்பதிகளில் ஒருவரின் கையொப்பத்தை காணி உறுதியில் மோசடியாக இட்டுள்ள முன்னால் பிரபல கல்லூரி அதிபர் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இவர்களை மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்று ஏற்கனவே அறிவுறுத்தியதற்கு மாறாக பொலிஸார் தொடர்ந்து செயற்படுகின்றனர்.

இது சட்டத்துக்குப் புறம்பானது. ஒன்றில் நேர்மையான முறையில் முழுமையான புலன் விசாரணை செய்யப்பட வேண்டும் அல்லது இந்தப் புலன் விசாரணை கைவிடப்படவேண்டும். இதில் எதைச் செய்யப் போகின்றார்கள் என்பதைப் பொலிஸார் நீதிமன்றிக்குத் தெரிவிக்க வேண்டும் – என்று மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா சமர்ப்பணம் செய்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட பொலிஸ் தரப்பினர், பிரசித்த நொத்தாரிசைத் தேடி அவரின் வீட்டுக்குத் தாம் இரு தடவை சென்றார் என்றும், ஆனால் அவர் அங்கிருக்கவில்லை என்றும், தமது தொலைபேசி அழைப்புக்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் மன்றுரைத்தனர்.

இதற்குப் பதிலாக, குறித்த பிரசித்த நொத்தாரிசு சட்டத்தரணி என்ற முறையில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்குச் சமூகமளித்து வருகின்றார் என்றும், ஏனைய சந்தேகநபர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயே தங்கியுள்ளனர் எனறும் உறுதியாகக் கூறமுடியும் என்று குறிப்பிட்ட சட்டத்தரணி சிறீகாந்தா, சட்டத்தையும் நீதிமன்றத்தையும் ஏமாற்றமுடியும்என்றுநினைக்காதீர்கள். குறித்த சந்தேகநபர்களுக்கு எதிராக உங்கள் விரல்கள் இன்னமும் ஏன் நீட்டப்படவில்லை என்பதற்கான காரணம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். எல்லாக் குற்றங்களையும் ஒருவரின் தலையில் பொலிஸார் சுமத்தப் பார்க்கின்றனர். இது பலர் சம்பந்தப்பட்ட மோசடி. அனைத்து நபர்களும் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும். பொதுமக்களின் கவனத்தை இந்த வழக்கு ஈர்த்திருக்கின்றது. இது பாரதூரமான விவகாரம். எனது கட்சிக்காரரான சந்தேகநபர் என்னைக் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் இன்றும் நான் பிணை கோரவில்லை என்று சிறீகாந்தா மன்றுரைத்தார்.

சந்தேகநபர் சார்பாக முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து கட்டளை ஒன்றை வழங்கிய மேலதிக நீதிவான், வழக்கு நடவடிக்கைகளின் பதிவு யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், அதன் மீதான அவரின் அறிக்கை அடுத்த தவணை மன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தில், சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்படுவதைக் கருத்திற்கொண்டு அடுத்த தவணையை இரு வார காலத்துக்குப் பதிலாக ஒருவார காலம் முடிவில் நிச்சயிக்குமாறு மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா கோரியதைப் பரிசீலித்த மன்று, எதிர்வரும் 11 ஆம் திகதி வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உத்தரவிட்டது.

## கூட்டுத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுரம் கிழக்கு தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் இன்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் தலைவராக மகிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் ஊடாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றது. பல்வேறு உபாய வார்த்தைகளைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலை மேலும் ஒத்திவைக்காமல் நடத்த வேண்டும் என்று மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்

இந்த ஆணைக்குழுவின் ஊடாக புதிய மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கின்றது.

தேர்தல்முறைமையைமாற்றியமைக்காமல் மக்கள் அபிப்பிராயத்திற்குச் செவிசாய்த்து, அவர்கள் வாக்களிக்கும் வகையில் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டியதே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை.

உரிய காலத்தில் அந்தந்த தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும், பல்வேறு தந்திர உத்திகளை கையாண்டு தேர்தலை நடத்துவதற்கு தாம் எதிர்ப்பு என்றும் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார்.

அவரது அந்த அறிக்கைகள் இன்றும் செல்லுபடியாகும் என்றால், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் பதவியைப் பெற்று தேர்தலை ஒத்திவைக்கும் தந்திர உத்தியில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என எதிர்க்கட்சியாகக் கோரிக்கை விடுக்கின்றோம்.

இவ்வாறு தேர்தலை ஒத்திவைப்பது மக்களின் ஜனநாயக உரிமையை மீறும் செயலாகும். மக்கள் கோரிக்கை விடுப்பது தேர்தலே என்பதால் அதை நடத்த வேண்டும். இல்லையெனில் 220 இலட்சம் மக்களுடன் வீதியில் இறங்கி தேர்தலைச் சந்திப்போம் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# வவுனியா பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள்!




வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வொன்று இடம்பெற்றது.

நேற்று (வெள்ளிக்கிழமை) அல் – இக்பால் மகா வித்தியாலயத்தில் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தர மாணவர்கள் பாடசாலை இடைவிலகிய பின்னர் தொழில் வாய்ப்புக்களைப் பெற முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள், பாடசாலைக் கல்வியின் பின் முன்னெடுக்கக் கூடிய கற்கைகள், வருமானம் ஈட்டும் தொழில்நுட்பக் கற்கைகள் தொடர்பிலும், மாணவர்களின் எதிர்காலம் நோக்கிய வளமான வாழ்க்கை தொடர்பிலும் இதன் போது விளக்கமளிக்கப்பட்டது.

வவுனியா, வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி தொழில் வழிகாட்டல் ஆலோகர் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

